18th July 1964]

மருந்து தெளிக்கப்பட்ட எக்கரா பரப்பு.	இதற்கான செலவு.
(1)	(2)
	ரூ.
1963–64.	
கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூகாவில் 13,402 எக்கரா. (இதில் நிலக்கடலை பயிராகும் 7,224 எக்கரா, மற்ற பயிர்கள் விளையும் 3,408 எக்கரா, 2,770 எக்கரா தரிசு நிலம் அடங்கும்.)	1,13,207

தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம், விழுப்புரம் தாலூகாக்களில் விமானமூலம் மருந்து தெளிக்கவும், அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஹெலிகாப்டர் அல்லது விமானம் கிடைக்காததால் மருந்து தெளிக்க இயலவில்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிவப்பு கம்பளிப் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிருமிநாசினிகள் கையினால் இயக்கப்படும் யந்திரங்களைக் கொண்டு தூவப்பட்டுள்ளன.

APPENDIX II.

[*Vide* answer to starred question No. 544 on page 169]

STATEMENT.

(*a*) A rising tendency in prices of sugar was noticed towards the end of January 1963 in spite of large releases of sugar during that period. With a view to conserving supplies and ensuring equitable distribution of the available supplies of sugar at fair prices to consumers, the Government of India in the Ministry of Food and Agriculture (Department of Food), New Delhi, promulgated the Sugar (Control) Order, 1963, under the provisions of the Defence of India Rules, 1962. This order came into force throughout the country on 17th April 1963. The Government of India have introduced thereby complete control over the distribution of sugar at the wholesale and at retail stages.

(*b*) Under the scheme the regulation envisaged by this Order is as follows :—

(i) Ex-factory prices have been fixed in eleven regions including the Southern Region consisting of Madras, Andhra Pradesh, Mysore and Kerala ;

(ii) the Government of India will allocate every month quotas of sugar to each State after taking into consideration the supplies available and the off-take of individual States during the last control period, when the system of allotment of monthly quotas was in vogue, and restriction on inter-State movement existed ;

(iii) the State Government will sub-allocate the quotas allotted to them to different areas or districts in the State and nominate licensed sugar dealers to take delivery of the allocated quantity of sugar from particular factories ; and

(iv) the State Government will fix the prices at which the sugar will be sold at wholesale and retail levels taking into consideration the charges incurred in bringing sugar to the areas of consumption plus a reasonable margin for expenses and profit.

26 DEC 1964
STATE LEGISLATURE, MADRAS

[18th July 1964

பதில்—(அ) 1963 ஜனவரி முடிவில் சர்க்கரை ஏராளமான அளவில் சர்க்கரை ஆலைகளிலிருந்து அனுப்பப்பட்ட போதிலும், சர்க்கரை விலைகள் அதிகரித்து வந்ததாகத் தெரிந்தது. சப்ளை நிலைமையைக் காக்கவும், கிடைக்கும் சர்க்கரை சப்ளையை நியாய விலைக்கு எல்லோருக்கும் நிச்சயமாகக் கிடைக்கச் செய்யவும் புது டில்லி, இந்திய அரசாங்க உணவு–வேளாண்மை அமைச்சகம் (உணவுத்துறை) 1962–ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளில் கண்ட ஷரத்துக்களின்படி, 1963–ம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாட்டு) ஆணையை வெளியிட்டது. இந்த ஆணை 1963 ஏப்ரல் 17-ம் தேதியன்று நாடெங்கிலும் அமலுக்கு வந்தது. அதன்மூலம் இந்திய அரசாங்கம் மொத்த விற்பனை நிலையிலும் சில்லறை விற்பனை நிலையிலும் சர்க்கரைப் பங்கீட்டின்மீது முழு அளவுக் கட்டுப்பாட்டினை அமலுக்குக் கொண்டு வந்தது.

(இ) இந்த ஆணையின்கீழ் அடியிற்கண்டவாறு ஒழுங்குமுறை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(i) தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் அடங்கிய தென் பிராந்தியம் உட்பட 11 பிராந்தியங்களில் தொழிற்சாலை வாயில் விலைகள் (ex-factory prices) நிச்சயிக்கப்பட்டுள்ளன.

(ii) ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்குமான சர்க்கரைக் கோட்டாவை இந்திய அரசாங்கம் அடியிற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு ஒதுக்கிக் கொடுக்கும் ; (1) கிடைக்கும் சர்க்கரையின் அளவு ; (2) சென்ற கட்டுப்பாட்டுக் கால அளவில் மாதாந்திர சர்க்கரைக் கோட்டா ஏற்பாடு அமுலில் இருந்தபோதும் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு சர்க்கரை அனுப்புவதில் கட்டுப்பாடு இருந்தபோதும் அந்தந்த மாநிலங்கள் பெற்ற சர்க்கரையின் அளவு ;

(iii) மாநில அரசாங்கம் தனக்களிக்கப்படும் சர்க்கரைக் கோட்டாக்களை மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் அல்லது மாவட்டங்களிடையே பங்கிட்டுக் கொடுக்கும். பங்கிட்ட சர்க்கரையை குறிப்பிட்ட தொழிற்சாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ள லைசென்ஸ் பெற்ற சர்க்கரை வியாபாரிகளை மாநில அரசாங்கம் நியமிக்கும் ;

(iv) மொத்த விற்பனை நிலையிலும் சில்லரை விற்பனை நிலையிலும் சர்க்கரையை விற்க வேண்டிய விலைகளை மாநில அரசாங்கம் நிச்சயிக்கும். விற்பனையிடங்களுக்கு சர்க்கரையைக் கொண்டு வருவதற்கும் செலவினையும் மற்றச் செலவுகட்கும், லாபத்திற்குமாக நியாயமான தொகையையும் கருத்தில் கொண்டு அந்த விலைகள் நிச்சயிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS